### பரங்கிமலையில்

# மெட்ரோ–பறக்கும் ரெயில், மின்சார ரெயில் சந்திப்பு

## வேளச்சேரி–ஆதம்பாக்கம் இடையே அடுத்த ஆண்டு ரெயில் போக்குவரத்து

சென்னை,நவ.28–

சென்னையில் போக்குவரத்துக்கு பெரிதும் கைகொடுப்பது மின்சார ரெயில்கள், பறக்கும் ரெயில்கள், மெட்ரோ ரெயில்கள்.

சந்திப்பு

கடற்கரை–தாம்பரம், கடற்கரை–வேளச்சேரி ஆகிய வழித்தடங்களில் மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.

அதேபோல் சென்ட்ரல்–பரங்கிமலை, வண்ணாரபேட்டை– விமான நிலையம் இடையே மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகிறது.

இந்த 3 ரெயில் வழித்தடங்களும் ஒருங்கிணையும் சந்திப்பாக பரங்கிமலையில் ஒருங்கிணைந்த ரெயில்களின் முனையம் அமைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது.

தற்போது சென்னை கடற்கரையில் இருந்து வேளச்சேரி வரை 19 கிலோ மீட்டர் தூரம் பறக்கும் ரெயில் இயக்கப்படுகிறது. இந்த வழித்தடத்தில் கோட்டை, பூங்காநகர், சிந்தாதிரிபேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, கலங்கரை விளக்கம், திருமயிலை, மந்தவெளி, பசுமைவழிச்சாலை, கோட்டூர்புரம், கஸ்தூரிபாய்நகர், இந்திராநகர், திருவான்மியூர், தரமணி, பெருங்குடி உள்ளிட்ட 17 ரெயில் நிலையங்கள் உள்ளன. இந்த வழித்தடத்தில் தினமும் ஒரு லட்சம் பேர் பயணிக்கிறார்கள்.

வேளச்சேரி– பரங்கிமலை

வேளச்சேரி– பரங்கிமலை இடையேயான 5 கிலோ மீட்டர் தூர மேம்பால ரெயில் பாதை பணிகள் மந்தமாக நடந்தன.

தற்போது வேளச்சேரியில் இருந்து ஆதம்பாக்கம் வரை பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த வழித்தடத்தில் புழுதிவாக்கம் ரெயில் நிலையம் உள்ளது. அடுத்த ஆண்டு ஆதம்பாக்கம் வரை ரெயில்கள் இயக்கப்பட உள்ளது. 2021–ல் பரங்கிமலை வரையிலான பணிகளை முடித்து ரெயில்கள் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த பணிகள் நிறைவடைந்ததும் வேளச்சேரி, மயிலாப்பூர் பகுதிகளில் இருந்து தாம்பரத்துக்கு ரெயில் வசதி கிடைக்கும். தகவல் தொழில் நுட்ப பகுதிகளில் இருந்து எளிதாக ஜி.எஸ்.டி. ரோடு, விமான நிலையத்தை சென்றடையும்.

பரங்கிமலை மெட்ரோ ரெயில் நிலையத்தில் முதல் தளத்தில் பறக்கும் ரெயில் பாதை அமைவதால் மின்சார ரெயிலுடன் பறக்கும் ரெயில் ஒருங்கிணையும்.